DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
2 JUL 2023
CHENNAI - 600 015.

PRI-1

3/14

40797 **சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் – நீலகிரி மாவட்டம் – மாவட்ட ஊராட்சித் தலைவர் உபயோகத்தில் இருந்த வாகன எண்.TN 43 G 0585 என்ற வாகனத்தை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து ஏலம் விடுவதற்கு அனுமதி அளித்து–ஆணை வெளியிடப்படுகிறது.

AD(R)/PRI-1

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–3) துறை**

அரசாணை (2ப) எண். 103

நாள் 19.07.2023
சோபகிருது, ஆடி 3ந் தேதி
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.2275, உள் (போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.E1265779/ 2022/ஆ1, நாள் 20.03.2023
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.19119/2020/பரா.1.1, நாள் 06.04.2023 மற்றும் 30.05.2023

---------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வாகனம் வாங்கப்பட்டு 10 வருடங்கள் அல்லது பெட்ரோல் வாகனமாக இருந்தால் 2 இலட்சம் கிலோ மீட்டரும், டீசல் வாகனமாக இருந்தால் 2.5 இலட்சம் கி.மீ ஓடியிருக்க வேண்டும். இதில் எது பிந்தியதோ அப்போது வாகனம் கழிவு நீக்கம் செய்ய தகுதியுடையதாகும். வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், நீலகிரி மாவட்டம், மாவட்ட ஊராட்சித் தலைவர் உபயோகத்தில் இருந்த வாகன எண்.TN 43 G 0585 Scorpio LXBS, அரசாணை (நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளான, 10 வருடங்கள் ஆகியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்துள்ளது. ஆனால், டீசல் வாகனமாக இருந்தால் 2.5 இலட்சம் கி.மீ ஓடியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்யவில்லை என்றும், இவ்வாகனம் பழுதுநீக்கம் செய்ய ரூ.91,500/– செலவாகும் என்பதாலும், இவ்வாகனத்தை விற்பனை செய்வதன் மூலம் ரூ.2,48,000/– மட்டும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலும், இவ்வாகனத்தை பழுது நீக்கம் செய்வது சிக்கனமாக இராது என்று தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் அறிக்கைகளில் பரிந்துரை

செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட ஊராட்சித் தலைவர் உபயோகத்தில் இருந்த வாகன எண். TN 43 G 0585 Scorpio LXBS என்ற வாகனத்தை மோட்டார் வாகன பராமரிப்புத்துறை இயக்குநரின் பரிந்துரையின்படி, வாகனம் மேற்சொன்ன அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறியீடுகளை கடக்காததால் தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் கருத்தினை ஏற்றுக் கொண்டு மேற்படி வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய கோரும் நீலகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்து உரிய அரசாணையை பிறப்பித்திடுமாறு கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, மோட்டார் வாகன பராமரிப்புத்துறை இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வாகனங்களை பழுது நீக்கம் செய்வது சிக்கனமாக இராது என்பதால் கழிவு நீக்கம் செய்து விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையினை அரசு கணக்கு தலைப்பில் செலுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன், நீலகிரி மாவட்ட ஊராட்சித் தலைவர் உபயோகத்தில் இருந்த வாகன எண். TN 43 G 0585 Scorpio LXBS, என்ற வாகனத்தை முதிரா நிலையில் கழிவுநீக்கம் செய்து ஏலம் விடுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம்
இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை,
சென்னை-42
மாநில கணக்காயர், சென்னை-18

**நகல்:-**
நிதி (ஊரகவளர்ச்சி) துறை, சென்னை-9.
உள் (போக்குவரத்து-4) துறை, சென்னை-9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
இருப்புகோப்பு / உதிரிநகல்
கோப்பு எண்.1610/மா.அ.தி.3/2023

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21.07.23
பிரிவு அலுவலர்.